Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 1058/2025 |
| Police station | : | Pew-Panruti |
| Deposition of witness for Prosecution | : | LW3 / PW2 |
| Name | : | திரு. கிருஷ்ணமூர்த்தி (காவல் ஆய்வாளர்) |
| Father Name/Husband Name | : | |
| Village | : | |
| Cuddalore | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 28.07.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

( எதிரி ஆஜரில் இல்லை. கு.வி.நடைமுறை சட்டம் பிரிவு 355 BNS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை:**

நான் தற்போது விழுப்புர நகர காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 09.01.2025-ம் தேதி பகல் 14.30 மணியளவில் எனது தலைமையில் தலைமைக் காவலர் 876 திரு.வீரய்யன் மற்றும் 936 திரு.பிரேம்நாத் ஆகியோர்கள் சகிதம் நத்தப்பட்டு பஸ் ஸ்டாப் அருகில் மது விலக்கு சம்பந்தமாக கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமாக கையில் ஒரு பாலித்தின் பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது, அவர்

பெயர் சசிகுமார் த/பெ.அருள் என்று கூறினார். அவர் வைத்திருந்த பாலித்தின் பையை சோதனை செய்த போது தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பாண்டிச்சேரி மாநிலத்தில் விற்பனை செய்யப்படும் 1) 500 ML அளவு கொண்ட கொரியர் நெப்போலியன் பிராந்தி 4 எண்ணிக்கை, 2) 375 ML neon Vodka –1 எண்ணிக்கை மொத்தம் –5 மதுபான பாட்டில்கள் வைத்திருந்தார். அதை வைத்திருப்பதற்கு அவரிடம் எவ்வித அனுமதியோ, உரிமமோ இல்லை. அவர் விற்பனைக்காக வைத்திருப்பதாக சந்தேகத்தின் அடிப்படையில் நான் அவரை காரணம் கூறி 14.40 மணிக்கு கைது செய்தேன். அந்த இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் இருந்த தலைமை காவலர்கள் வீரய்யன் மற்றும் பிரேம்நாத் ஆகியோர்கள் முன்னிலையில் 15.00 மணிக்கு மேற்படி மது பாட்டிலை ஒரு கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்கள் சகிதம் நிலையம் ஆஜராகி எதிரியை திரேக பரிசோதனை செய்து பாரா காவல் வசம் ஒப்படைத்து எதிரி மீது நிலைய குற்ற எண். 08/2025 ல் சட்டப் பிரிவுகள் 4(1)(C), 4(1)(A) TNP Act ன் படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்து உரிய நடைமுறைக்கு பின் உரிய நிலைய பிணையில் விடுவிததேன். **மேற்படி கணிணி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எனக்கு உதவியாக இருந்த தலைமை காவலர்கள் வீரய்யன் மற்றும் பிரேம்நாத் ஆகிய இருவரையும் தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்றைய தினமே வழக்கின் கோப்பினை பார்வையிட்டு ஆஜர் எதிரிக்கு எதிராக சட்டப் பிரிவுகள் 4(1)(C),4(1)(A) TNP Act ன் படிகுற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

ஒரு தகவல் பெறப்பட்டால் அதை காவல் நிலைய பொது நாட்குறிப்பில் குறிப்பிட்டவேண்டும் என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பின் பக்கம் எண் எப்போது

தகவல் பெறப்பட்டது நேரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கையில் அதை குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி விபரங்களை குறிப்பிடாததற்கு ஏதேனும் தனிப்பட்ட காரணம் உள்ளதா என்றால் இல்லை. தனி நபர் சாட்சிகளை விசாரிக்க அழைத்தபோது முன்வராததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்களின் பெயர் விபரங்களை எனது வழக்கு நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் அவர்கள் பெயர் விபரங்களை கூட சொல்ல மறுத்துவிட்டார்கள். அதனால் அவர்களை பற்றி குறிப்பிட முடியவில்லை. அவ்வாறு சாட்சி சொல்ல மறுத்ததற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. எதிரி வந்ததாக சொல்லப்படும் இரு சக்கர வாகனத்தின் உரிமையாளரை விசாரித்தேனா என்றால் இல்லை. அதன் உரிமையாளர் யார் என்று எனக்குதெரியாது என்றால் சரிதான். எதிரி எடுத்து வந்ததாக சொல்லப்படும் பாலிதின் பையை கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் யாரிடமிருந்து எங்கே கைப்பற்றப்பட்டது என்ற காலத்தில் அரவிந்த் தங்கலிக்குப்பம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரியை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சான்று பொருட்கள் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மது விலக்கு அமலாக்கப்பிரிவு காவல் நிலையத்தில் இருந்து அரசு மது விலக்கு அமலாக்க துறைக்கு புள்ளி விபர கணக்கு ஆண்டுதோறும் கொடுக்கவேண்டும் என்றால் தேவையில்லை. புள்ளி விபர கணக்கு கொடுக்கவேண்டும் என்பதற்காக எதிரியின் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்து தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.